# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

******

**முறையீட்டு மனு எண்: 1273/2017/பே–2**

**ஆணை நாள். 17 –12–2018.**

திரு. டி. வீரமுத்து,
71–ஏ, வடக்கு ரத வீதி,
பெண்ணாடம்,
திட்டக்குடி வட்டம்,
கடலூர் மாவட்டம். -- முறையீட்டு மனுதரார்.

செயல் அலுவலர்,
பெண்ணாடம் பேரூராட்சி
கடலூர் மாவட்டம். -- எதிர் மனுதாரார்.

ஆணை.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ ஆணை எண்.157/2017,நாள்.19.06.2017ன்படி கடலூர் மாவட்டம், பெண்ணாடம் பேரூராட்சி ரீ. சர்வே எண்.497/9ல் கட்டப்பட்டுள்ள கட்டிடம், விதி மீறி கட்டப்பட்டுள்ளதாக முறையீட்டு மனுதாரர் திரு.டி.வீரமுத்து என்பவரால் அளிக்கப்பட்ட முறையீட்டு மனு தொடர்பாக, கடலூர் மாவட்டம், பெண்ணாடம் பேரூராட்சி செயல் அலுவலரால், எதிர் மனுதாரர்களுக்கு அளிக்கப்பட்ட அறிவிப்பு நோட்டீஸ் ந.க.எண்.அ2/086/2017/நாள் 27.07.2017, பெண்ணாடம் பேரூராட்சி செயல் அலுவலரின் கடித ந.க.எண். அ2/086/2017 நாள் 31.08.2017 ன்படி இம்முறைமன்ற நடுவத்தில் 14.09.2017ல் பெறப்பட்டு, முறையீட்டு மனு எண்.1273/2017 என எண்ணிடப்பட்டது. மேற்படி கடிதம் மீதான அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

பெண்ணாடம் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிவிப்பு நோட்டீசில், எதிர் மனுதாரர்களான திரு.கலியமூர்த்தி மற்றும் அவரது மனைவி திருமதி.பானுமதி ஆகியோரால் பெண்ணாடம் பேரூராட்சியில் கட்டப்பட்டு வரும் கட்டிடத்திற்கு தரை தளத்திற்கு மட்டும் பேரூராட்சி மூலம் அனுமதி பெற்று, அனுமதி இல்லாமல் முதல் மற்றும் இரண்டாம் தளம் கட்டி முடிக்கப்பட்டுள்ளதாலும், கட்டிட உரிம விதிகளின்படி பரப்பளவு 4,000 சதுர அடிக்கும் மேல் உள்ளதால், விதிகளின்படி உரிய ஆவணங்களை பேரூராட்சி மூலம் விழுப்புரம் நகர் ஊரமைப்புத் துறை உதவி இயக்குநரிடம் சமர்ப்பித்து அனுமதி பெறப்படவேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து முறையீட்டு மனுதாரர் திரு.டி.வீரமுத்து, மேற்படி பொருள் தொடர்பாக 29.09.2017 நாளிட்ட கடிதத்தில், மேற்படி இடத்தில் கட்டப்பட்டுள்ள கட்டிடம் தொடர்பான விதி மீறல்களை குறிப்பிட்டு இம்முறைமன்ற நடுவத்திற்கு மனு சமர்ப்பித்துள்ளார்

இம்முறைமன்ற நடுவ 08.11.2017 நாளிட்ட கடிதத்தில், மேற்படி 26.09.2017 நாளிட்ட மனுவினை கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு அனுப்பி வைக்கப்பட்டு, மேற்படி மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரம் மற்றும் கடலூர் மாவட்டம், பெண்ணாடம் பேரூராட்சியில் இம்முறைமன்ற நடுவ ஆணைப்படி விதி மீறிய கட்டிடங்கள் மீது உரிய சட்ட விதிகளின்படி எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தினை சமர்ப்பிக்கக் கோரி 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 6(4) (a) ன் கீழ் ஆணையிடப்பட்டது.

இம்முறைமன்ற நடுவ 05.09.2018 நாளிட்ட அழைப்பாணையின்படி இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான கடலூர் மாவட்டம், பெண்ணாடம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில், தான் கடந்த 10 மாத காலமாக பெண்ணாடம் பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிவதாகவும், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ ஆணை நாள்.19.06.2017ஐ தொடர்ந்து 27.07.2017ல் ஒரு அறிவிப்பு சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டதாகவும், கடந்த ஒரு வருடம், நான்கு மாத காலம் வரை இதில் முன்னேற்றம் ஏதும் இல்லை எனவும், தனக்கு இந்த பத்து மாத காலம் வரை எவ்வித விவரங்களையும் அலுவலகத்தில் யாரும் தெரிவிக்கவில்லையெனவும், பேரூராட்சி அலுவலக இளநிலை உதவியாளர் திரு.கிருஷ்ணமூர்த்தி என்பவர், மேற்படி பொருள் தொடர்பாக தனது கவனத்திற்கு கொண்டு வரவில்லையெனவும், அறிவுரைகளின்படி சட்டப்படியான நடவடிக்கை மேற்கொண்டு தனது அறிக்கையினை 10 நாட்களுக்குள் சமர்ப்பிப்பதாக தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

கடலூர் மாவட்டம், பெண்ணாடம் பேரூராட்சி செயல் அலுவலரின் 19.11.2018 நாளிட்ட அறிக்கையில், பெண்ணாடம் பேரூராட்சி, வடக்கு ரத வீதியில், தாதன் குட்டைக்கு செல்லும் பாதையில் ரீ.சர்வே எண். 241/1 எ1 ல் கட்டிடம் கட்டுவதற்கு ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டதையொட்டி கட்டிட உரிமையாளர் திரு.ஜி.கலியமூர்த்தி என்பவர் அத்துமீறலாக செயல்பட்டுள்ளார் என திரு.டி.வீரமுத்து என்பவரால் உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்து கொண்டதையடுத்து, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 08.11.2018 நாளிட்ட அறிவிப்பாணையின்படி, பெண்ணாடம் பேரூராட்சி மூலம் 22.10.2018 மூலம் இறுதி நோட்டீஸ் வழங்கப்பட்டு, அதில் 7 நாட்களுக்குள் அனுமதி பெறமல் கட்டப்பட்ட கட்டிடத்தை இடித்துக் கொள்ள அறிவுறுத்தப்பட்டதாகவும், இதனைத் தொடர்ந்து மேற்படி எதிர் மனுதாரரால் திட்டக்குடி சார்பு நீதிமன்றத்தில் நீதிப்பேராணை எண்.328 மற்றும் O.S.No.179/2018 மூலம் உறுத்துக் கட்டளை பெற்றும், OS.No 179/2018ன் மூலம் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ள இயலவில்லையெனவும், நீதிமன்ற வழக்கு முடிவுற்ற பின்னர் உரிய நடவடிக்கை மேற்கொள்வதாகவும் தனது அறிக்கையில் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் மேற்படி ஆணை தொடர்பாக எதிர் மனுதாரரால் திட்டக்குடி சார்பு நீதிமன்றத்தில் நீதிப்பேராணை எண். 179/2018ன் மூலம் வழக்கு தொடர்ந்துள்ளதால், 2014–ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10(3) (b) ன்படி நீதிமன்றமொன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம்

விசாரித்திடலாகாது என்ற நிலையில் இப்பொருள் தொடர்பான எவ்வித ஆணையினையும் இம்முறைமன்ற நடுவத்தால் தற்போது பிறப்பிக்க இயலாது என ஆணையிடப்படுகிறது.

இருப்பினும், 19.06.2017ல் இம்முறைமன்ற நடுவத்தால் ஆணை பிறப்பிக்கப்பட்டு, அதன் தொடர்ச்சியாக 27.07.2017ல் எதிர் மனுதாரர்களுக்கு ஒரு அறிவிப்பு மட்டும் பெண்ணாடம் பேரூராட்சியால் வழங்கப்பட்டு, அதன்பின்னர் இப்பொருள் தொடர்பாக தொடர் நடவடிக்கை ஏதும் எடுக்காமலும், 10.07.2018ல் அறிவிப்பிற்கு மாறாக வரன்முறைப்படுத்த பரிந்துரைக்கப்பட்டுள்ளதும், அதன் பின்னர் உதவி இயக்குநர் அவர்களது அறிவுரைகளைத் தொடர்ந்து 12.11.2018ல் முறையற்ற கட்டுமானங்கள் குறித்து அறிவிப்பு வழங்கி உள்ளதும் பேரூராட்சி நிர்வாகத்தின் மெத்தனமான/கவனக்குறைவான செயல்பாட்டினை காட்டுகிறது. எனவே இதற்கு பொறுப்பான பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் இது சம்பந்தமாக பேரூராட்சி செயல் அலுவலரின் கவனத்திற்கு கொண்டு வராமலும் கவனக்குறைவாகவும் செயல்பட்ட பெண்ணாடம் பேரூராட்சி இளநிலை உதவியாளர் திரு.கிருஷ்ணமூர்த்தி என்பவர் மீதும் துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ள கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநருக்கும் பரிந்துரைத்து ஆணையிடப்படுகிறது.

2018–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 17 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

**–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–**

செயலாளருக்காக.

பெறுநர்

1.திரு. டி. வீரமுத்து,
71–ஏ, வடக்கு ரத வீதி,
பெண்ணாடம்,
திட்டக்குடி வட்டம்,
கடலூர் மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
பெண்ணாடம் பேரூராட்சி,
கடலூர் மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம்,
கடலூர் மண்டலம்,
கடற்கரை சாலை,
கடலூர்–607001.

4.பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
குறளகம், சென்னை –108.